

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஜனவரி - 13.01.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விருதுகள்
- விளையாட்டு செய்திகள்
- பாதுகாப்பு செய்திகள்









# தமிழக நிகழ்வுகள்

- தமிழக அரசின் **"அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்"**துவக்க விழாவினை தமிழக முதல்வர் துவக்கி வைக்கிறார்.
    - காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஸ்ரீபெரும்பதூர் ஒன்றியம் **"கிளாய் கிராம ஊராட்சி"**விளையாட்டு மைதானத்தில் காணொலிக்காட்சி வாயிலாக துவக்கி வைக்கிறார்.
    - தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
    - **செய்திதுளிகள்**
        - **"விளையாடு, வெற்றிபெறு, சிகரம்தொடு"** என்ற கருத்துருவுடன் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
        - தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.கே.செங்கோட்டையன் ஆவார்.
        - தமிழக தலைமைச் செயலாளர் க.சண்முகம் ஆவர்.

# தேசிய நிகழ்வுகள்

- **கொல்கத்தா துறைமுகத்துக்கு சியாமா பிரசாத் முகர்ஜி பெயர் சூட்டப்படும்** என பிரதமர்மோடி அறிவிப்பு.
    - கொல்கத்தா துறைமுகத்தின் 150-ஆவது ஆண்டுவிழா, அங்குள்ள நேதாஜி உள்விளையாட்டரங்கில் நடைபெற்றது.

- ○ 150-ஆவது ஆண்டு விழாவையொட்டி சிறப்பு தபால் தலையை பிரதமர் மோடி வெளியிட்டார்.
- ○ **செய்திதுளிகள் :**
    - ▪ சியாமா பிரசாத் முகர்ஜி ஜனசங்கத்தின் நிறுவனத் தலைவர் ஆவார்.
    - ▪ சியாமா பிரசாத் முகர்ஜி இந்தியாவின் தொழில் வளர்ச்சியின் தந்தையென அறியப்படுகிறார்.
    - ▪ சாகர்மாலா திட்டம் என்பது நாட்டில் உள்ள அனைத்து துறைமுகங்களையும் இணைப்பதற்காக தொடங்கப்பட்டது.

## சர்வதேச செய்திகள்

- **இந்தியா,சீனாவுக்கு எதிராக செயல்படும் என்ஜிஓ–க்களுக்கு தடை : நேபாளஅரசு அறிவிப்பு**
    - ○ நேபாள எல்லைப் பகுதிகளில் மதராஸா, மடங்கள் பெயரில் கல்வி மையங்களை உருவாக்கும் சர்வதேச தொண்டு நிறுவனங்களை கட்டுப்படுத்த மசோதா உருவாக்கப்பட்டு வருகிறது.
    - ○ நேபாளத்தின் வடக்கு எல்லையாக சீனாவும் தெற்கு எல்லையாக இந்தியாவும் அமைந்துள்ளன.
    - ○ **செய்திதுளிகள் :**
        - ▪ இந்தியாவும் - நேபாளமும் 1850 கிலோமீட்டர் நீளஎல்லையை பகிர்ந்து கொள்கின்றன.


We Shine Academy TM

- இந்தியா–நேபாள அமைதி மற்றும் நட்புறவுக்கான உடன்படிக்கை 1950 இல் மேற்கொள்ளப்பட்டது.

## விருதுகள்

- **இந்திய கிரிக்கெட் கட்டுப்பாடு வாரியம் 2018 – 19 ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர், வீராங்கனை விருது அறிவிப்பு.**
  - விருது விவரம் :
    - சிறந்த **வீரர் விருது – ஜஸ்ப்ரீத் பும்ரா**
    - சிறந்த **வீராங்கனை விருது – பூனம் யாதவ்**
    - வாழ்நாள் சாதனையாளர் விருது - ஸ்ரீகாந்த்
  - **செய்திதுளிகள்**
    - சிறந்தவீரராக தேர்வு செய்யப்படுபவருக்கு பிசிசிஐ சார்பில் பிரபல கிரிக்கெட் வீரரான பாலிஉம்ரிகர் விருதுகள் வழங்கப்படுகிறது.
    - பிசிசிஐ தலைவர் சௌரவ் கங்குலி
    - பிசிசிஐ செயலாளர் ஜெயா ஷா

## விளையாட்டு செய்திகள்

- **ஏடிபி கோப்பை போட்டியில் செர்பியா அணி சாம்பியன் பட்டம்** வென்றுள்ளது.
  - ஏடிபி கோப்பை அறிமுக போட்டியில் ஸ்பெயின் அணியை வென்றது செர்பியா அணி



WeShine Academy™

- செர்பியா அணி ஜோகோவிச் தலைமையிலும், ஸ்பெயின் அணி நடால் தலைமையிலும் களமிறங்கின.
- **செய்திதுளிகள் :**
  - ஆடவர் உலக டென்னிஸ் போட்டி எனப்படும் ஏடிபி கோப்பை 24 நாடுகளின் அணிகள் பங்கேற்ற நிலையில் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.
  - ஏடிபிகோப்பை ஆஸ்திரேலியாவில் நடைபெற்றது.

## பாதுகாப்பு செய்திகள்

- **இந்திய கடலோரக் காவல் படையில் "அம்ருத் கௌர்", "அன்னிபெசன்ட்"** என்ற பெயர்களில் **2 ரோந்து கப்பல்கள்** ஜனவரி 12, 2020 அன்று **சேர்க்கப்பட்டன.**
  - இவ்விரு கப்பல்களும் கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் நிறுவனத்தில் வடிவமைக்கப்பட்டவை.
  - விழாவில் பேசிய பாதுகாப்புதுறைச் செயலர் அஜய்குமார் வரும் 2024-ம் ஆண்டுக்குள் கடல்சார் வளம் மூலம் 17.74 லட்சம் கோடி திரட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.
  - **செய்திதுளிகள் :**
    - தற்போது இந்தியகாவல் படையில் 145 கப்பல்கள் உள்ளன.
    - கடற்படையில் 62 கண்காணிப்பு விமானங்கள் உள்ளன.
    - உலகப் பொருளாதாரத்தில் கடல்சார் பொருளாதாரம் 5

சதவீதம் ஆக உள்ளது.

## திருக்குறள்

**குறள் எண் : 76**

குறள் பால் :அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம் :அன்புடைமை

**அறத்திற்கேஅன்புசார் பென்பஅறியார்**

**மறத்திற்கும் அஃதேதுணை.**

**விளக்கம் :** அறம் செய்வதற்கே அன்பு துணையாக உள்ளது என்று அறியாதவர் கூறுவர். ஆனால், தீமையை ஒழிப்பதற்கும் அதுவே துணையாம்.